“பார்ப்பனர்கள் மகா தந்திரசாலிகள்”

க்கரம்மை • வேல

R34
N82
927

பார்ப்பனர்கள்
மகா தந்திரசாலிகள்

588/82

குருவிக்கரம்பை வேலு

வளவன் பதிப்பகம்
70 - முதல் பெருவீதி,
இந்திரா நகர், சென்னை - 600 020.

விலை ரூ. 1-50

R34
NEL

அறிமுகம்

பார்ப்பனர்கள் இப்பொழுது கிளர்ந்து எழுந்து விட்டார்கள். ஏதோ, நாட்டில் அவர்களை ஒதுக்கி வைப்பதாகவும், அவர் தம் இனம் மிகத் துன்பப்படுவதாகவும், நீதி கிடைக்கப் போராடவேண்டும் என்றும் மாநாடு கூட்டிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஊர்வலம் வந்தால்-கிளர்ச்சி செய் தால், பழைய நிலையை அடைந்துவிடலாம் என்று கனவு காணுகிறார்கள்.

இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டு களாக, இந்த நாட்டுப் பெரும்பான்மை மக்களுக்கு-பார்ப் பனரல்லாதாருக்கு - அவர்கள் இழைத்து வந்த கொடுமை களை எண்ணினால் கல்லும் கரையும்; கரும்பாம்பும் நெஞ் சிரங்கும்! பார்ப்பனர்கள் சூதிலிருந்தும் சூழ்ச்சியிலிருந்தும் நாடு-மக்கள் இன்னும் முற்றும் விடுபடவில்லை. இந்த நிலையில் பார்ப்பனர்கள் தாங்கள் நசுக்கப்பட்டதாகக் கூட்டம் போட்டுப் பேசுவது நாட்டை ஏமாற்றும் மற்றொரு சூழ்ச்சியாகும்.

பார்ப்பனர் கொடுமைகளை விவேகானந்தர் - காந்தியார் - பாரதியார் போன்ற சனாதனிகளே கண்டித்துப் பேசி எழுதி யுள்ளவற்றைத் திரட்டிக் கொடுத்திருக்கிறார் குருவிக் கரம்பை வேலு அவர்கள். விவேகானந்தர் காந்தியார் பாரதி யார் போன்றவர்களே ஆத்திரப்படும்படி நடந்துகொண்ட பார்ப்பனக் கொடுமைகள் எவ்வளவு கொடியன என்பதை இந்நூல் முழுக்கப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

—வேத்தரசன்

66927

''பார்ப்பனர்கள் மகா தந்திரசாலிகள்''

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து, நிச்சயமாக, இன்றைய இந்தியாவில் - அன்றைய நாவலந்தீவு ஆரியர் திராவிடர் போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. இடையிடையே ஆரியர்கள் சிலசில தோல்விகளை அடைந்த போதிலும் தொடர்ந்து இன்றுவரை அவர்களே வெற்றிபெற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

முதலில் நாட்டை ஆளும் இடத்தைப் பெற்றார்கள். பிறகு மக்களின் எண்ணத்தை இலக்கியத்தை தங்களது பிடியில் சிக்கவைத்தார்கள்.

காட்டு மிராண்டிக் கால ஆக்கிரமிப்பாளர்களை அவர்களுடைய குடி மக்களின் மேம்பட்ட நாகரிகம் வென்று விடுமென்பது சரித்திரத்தின் அழியாச் சட்டமாகும்

(''இந்தியாவைப் பற்றி'' பக்கம். 69.)

என்ற மார்க்ஸின் கருத்து இங்கே ஒப்பு நோக்கத்தக்கது காட்டுமிராண்டி நாடோடிகளான ஆரியர்கள் அன்றைய உலகின் நாகரிக உச்சியிலிருந்த திராவிடர்களின் நாகரிகம் ஆரியர்களை வென்றது. ஆனாலும் பார்ப்பனர்கள் கால ஓட்டத்தில், தாங்கள்தான். இந்திய நாகரிகத்தையே உண்டாக்கியவர்கள் என்று, திராவிடர்களை நம்பவைத்து விட்டனர்.

திராவிடர்களிடமிருந்து பல நல்லதைக் கற்றார்கள். அவர்களிடமிருந்த சில நல்லதையும் பல கேடுகளையும் கற்பித்தார்கள். கேடுகளில் மிக முதன்மையானது சூதாட்டம்.

ஆரியர்கள் இந்தியாவுக்குள் புகுந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் இமயமுதல் குமரிவரை ஊடுருவி விட்டார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை 'தொல்காப்பியர் காலத்தில் மக்களிடத்திலும் இலக்கியத்திலும் இடம் பிடித்தார்கள்'. சிலப்பதிகார காலத்தில் ஊடுருவல் செய்தார்கள். கம்பனின் ராமகாதை காலத்தில் இரண்டறக் கலந்து விட்டார்கள்.

ஆடு மாடுகளை ஓட்டி வந்தவர்கள், நாகரிக வாழ்வு அறியாதவர்களாக வந்தவர்கள், ஆரியர்கள் அன்றைய உலகில் மிக உயர்ந்த நாகரிக வாழ்வு நடத்தியவர்கள் திராவிடர்கள். தொடர்ந்து உலகில் எங்கெல்லாம் நாகரிக வாழ்வு நடந்ததோ அங்கெல்லாம் திராவிடர்களுக்குத் தொடர்பு இருந்து வந்த நாள் அது. வடஇந்திய திராவிடர் மன்னர்களுக்குள் போட்டி பொறாமை அளவுக்கு மீறி இருந்தது. திராவிடர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள். அடுத்த திராவிடர்கள் வாழப் பொறாதவர்கள். ஆனாலும் அடுத்தவர்களுக்கு அள்ளி வழங்கும் வள்ளல்கள். ஆம், அன்றைய ''தாஸர்'' என்ற சொல்லுக்கு வள்ளல் என்று தான் பொருள். 'தாஸர்' என்று சொல்லுக்கான பொருளையே மாற்றிவிட்டனர், 'மகா தந்திரசாலிகளான' ஆரியர்கள். மேலும் நாவலந்தீவு திராவிடர்கள் கீழ்க் கண்டவைகளில் மிகுந்த 'ஞானம்' உள்ள கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

பல மனைவிகள் என்பது சாதாரணம். காதலில் கரைகண்டவர்கள். நாடோடிகளான அரை நிர்வாண ஏன் முழுநிர்வாண வெள்ளை வண்ண அணங்கு

களைக் கண்டால் என்ன நடந்திருக்கும். அணங்குகொல்! ஆய்மயில்கொல்! என்று மயங்காமலா இருந்திருப்பார்கள் ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். அக்கால நாவலந்தீவின் வடபாகத்தில் முழுதும் நாடோடிப் பெண்கள் தங்கள் உடைகளைக் களைந்து குளக்கரையில் வைத்து விட்டுக் குளிப்பது அன்றாட நடவடிக்கை. மொகஞ்சதாரோ வாரிசுகளான கருப்பர்கள் (க்ருஷ்ணர்கள்) குளக்கரையில் நின்று வெள்ளை அணங்குகளை நிர்வாணமாகக்கண்டுமகிழ்வதில் வல்லவர்கள் இவ்வாறான மக்களின் தலைவர்கள், மன்னர்கள் எவ்வாறு இருந்திருப்பார்கள்

தமிழகத் திராவிடர்கள்—இன்றைய தமிழர்கள்—பெண்ணின் சில பகுதிகளில் கண்கவர் சித்திரங்களை எழுதும் கலையில் மிகவும் நிபுணர்கள் என்பதை நமது அகஇலக்கியங்களில் இன்னும் அகலமாகக் காணலாம். நாவலந்தீவு வடதிராவிடர்கள். தமிழர்கள்—இதை விட விஞ்சியவர்களாக ஏன் இருந்திருக்கக் கூடாது?

தமது மூதாதையர்கள் இறந்த இடத்தில் நட்ட கற்களையும், மரங்களையும், பாம்புகளையும், வணங்குகிறவர்கள் திராவிடர் என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடப்பட்டாலும், பல குலங்களாக—பங்காளிகளாக பல தரப்பட்ட குல வழக்கங்களை தனக்கே உரியவர்களாக வாழ்ந்து வந்தார்கள். பங்காளிச்சண்டைகளை மிகத் தீவிரமாக நடத்துவதில், நாவலந்தீவு வடதிராவிடர்கள் தமிழகத் திராவிடர்களைவிட மிகவும் விஞ்சியவர்களாக இருந்தார்கள்.

பங்காளி மன்னர்களிடம் ஏற்பட்ட தொடர்ந்த சண்டைகள்.

வெள்ளை வண்ண அணங்குகள் மேல் ஏற்பட்ட 'மோகம்'

புதியவர்களான நாடோடிகள்—ஆரியர்களின் புதிய நாகரீகத்தின் மேல் ஏற்பட்ட கவர்ச்சி, வெளுத்ததெல்லாம் கள் என்ற உள்ளம் படைத்த திராவிடர்கள்; ஆரியர்களின் வஞ்சக எண்ணங்களை புரிந்த கொள்ள முடியாமை, என்ற போதையேறியவர்கள் ஆனார்கள். புத்தர் காலத்திற்குள் விந்தியத்திற்கு வடக்கே மேற்கே சிந்து முதல் கிழக்கே கங்கை வரையில் வெற்றிக் கொடி நாட்டி விட்டார்கள்.

விந்தியத்திற்கு தெற்கே குமரிவரையிலும், ஆரியர்களின் நச்சுக் கருத்துகள், புராணக் கதைகள்—மிகுதியும் பரப்பப் பட்டு விட்டது ஆனாலும் நாடு திராவிடர்களின் தமிழர் களின்—ஆட்சியிலேதான் இருந்தது.

புத்தர் காலம் வரை ஆரியர்களுக்கு எந்த எந்தக் காலத்தில் எவர், எவர் மன்னர் என்றோ, திராவிடர்களுக்கு எவர். எவர் மன்னர் என்றோ நம்பத் தகுந்த சரியான சான்றுகள் கிடைக்க வில்லை. இது அன்றைய நாவலந்தீவு முழுமைக்கும்—இமயம் முதல் குமரிவரை—பொருந்தும்.

புத்தர் காலத்திற்குள்—ஆரியர்கள் கூடியவரை பெரும் பகுதி மக்களை—தங்களின் அடிமைகள் ஆக்கிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

ஆரியர்கள் பிராமணர்கள்—தமிழில் பார்ப்பனர் ஆகி விட்டனர்—திராவிடர்கள் 'தாஸர்' அடிமைகள் என்று அழைக்கப்பட்டு — ''சூத்திரர்கள்'' நிலைக்கு—பிரம்மாவின் நெற்றியில் பிறந்தவர்களால் — ''உயர்த்தப்பட்டு விட் டார்கள்!'' ஆம்! இந்திய மக்கள் இன்று இவ்வளவு உயர்ந்த' நிலைக்கு இருப்பதற்குக் காரணம் நாங்கள் தான் என்று பார்ப்பனர்கள் கொஞ்சம்கூடக் கூசாமல் கூறுகிறார்களே.

ஒரு நாடோடிக் கூட்டமாக வந்து—உலகில் வேறு எப் பகுதியிலும் இல்லாத உயர்வுக்கு நாகரிக வாழ்வு நடத்திய இனத்தை வெற்றி கொண்டதாக நிச்சயமாக வரலாற்றில் இல்லை.

கட்டுப்பாடான, பொறுமையுடனும், தந்திரத்துடனும், படிப்படியாக, பார்ப்பனர் வெற்றிகொண்டு விட்டார்கள். இன்று வரை அந்த வெற்றிப் பெருமையில் உள்ள பூரிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். "இது உண்மை வெறும் புகழ்ச்சியல்ல."

கி. மு. 6ம் நூற்றாண்டில்தான் அவர்களுக்கு ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்டது. ஆம்! புத்தர்—பார்ப்பனர்களை எதிர்த்துப் போர் தொடுத்தார். 45 ஆண்டு காலம் தொடர்ந்து நடத்தி வந்தார்.

இந்திய ஆரியர்கள்-பார்ப்பனர்களின் வரலாற்றில் அவர்களுக்கு நல்ல அடி கொடுத்தவர், புத்தர்தான்.

வரலாறு தெரிந்த — திராவிடர் — 'சூத்திரர்'களுக்கு முதலில் கிடைத்த தலைவர் புத்தர்தான்.

பார்ப்பனர் இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கினால் புத்தரால் அவர்களுக்கு கிடைத்த அடியின் பலத்தை உணரலாம்.

'கண்டால் காமாட்சி நாய்க்கன் காணாவிட்டால் பூனை குத்திக் குறவன்' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. புத்தருக்கும் அது பொருந்தும். பௌத்தர்களை நேரில் கண்டவிடத்து 'புத்தர் விஷ்ணுவின் மறு அவதாரம்' என்றார்கள். காணாதவிடத்து அதாவது-சமஸ்கிருத நூல்களில்-வால்மீகி என்ற வேடன்—புத்தரைத் **'திருடன்'** என்றான். மற்றும் பலரால், **'மொட்டைத் தலையன்' 'சாதிகெட்டவன்' 'வேதநிந்தகன்' 'நாஸ்திகன்'-'முட்டாள்'** என்ற பட்டங்களை மிக நாகரிகமான—நாசுக்கான சொற்களால் 'போதி மாதவன்' அர்ச்சனை செய்யப்பட்டான்.

என்னே பிராம்மணர்களின் பரந்த உள்ளம். இவர்களை அடைவதற்கு இன்றைய இந்தியாஎன்ன 'தவம்' செய்ததோ! 'ஆரியர் நாடு எங்கள் நாடு' என்று ஆடுவோம்.

புத்தர் காலத்துத் திராவிடர்கள். ஓரளவு தங்கள் தவறைப் புரிந்து கொண்டார்கள். ஆனாலும் பார்ப்பனர் களை முழுதும் வெற்றி கொள்ள முடியவில்லை. அசோக மன்னன்—திராவிடர்களுக்கு பெருமளவு உதவி புரிந்தான். பார்ப்பனர்களை அணைத்துக் கொண்டுதான் போக வேண்டிய அளவுக்கு அவர்கள் வேர் ஊன்றிவிட்டதை அசோகன் புரிந்திருந்தான். இருந்தாலும் புத்தரும் அசோகனும் பார்ப்பனர்களின் மண்டையில் அடித்த அடியில் ஏற்பட்ட மயக்கத்தை தெளியவைக்க தமிழகத்திலிருந்து சங்கரர் (எதையும் அழிப்பவர்) வரவேண்டியிருந்தது.

மயக்கம் தெளிந்த பிராமணர்களில் சிலர்—கறி மீன் தின்பதை மறந்து விட்டார்கள். சோமபானம் குடிப்பதை நினைவு படுத்திக் கொள்ள முடியவில்லை. மறு பிறவி எடுத் தார்கள். முன்னைவிடத் தந்திரசாலிகள் ஆனார்கள் நச்சுத் தன்மை படைத்தவர்களாகவும் மாறிவிட்டார்கள் மீண்டும் வெற்றி பெற்றுவிட்டார்கள். வெற்றி நீண்ட நாள் நிலைக்க வில்லை. அரேபியாவின் முகமதுவின் தொண்டர்கள் தொடர்ந்து, பிராமணர்களுக்குக் கொடுத்த அடியில், முகமதுவின் பெயரால் ஆண்ட மன்னர்களின் அரண் மனைக்குள் அடைக்கலம் புகுந்து—திராவிடர்களின் பழக்கத் தால் ஏற்பட்ட நிறக்குறைவை மீண்டும் ஒளி பெறச் செய் தார்கள். சில பார்ப்பனர்கள். பல பார்ப்பனர்கள் 'இந்து' மன்னர்களின் இராசகுருவானார்கள். மன்னர்களின் ஆசைக் குரியவர்களானார்கள். நாட்டை 'பிராமதேய' மாக்கிப்பங்கு போட்டுக் கொண்டுவிட்டார்கள். 'பொத்தல் இலைக் கலமானார் திராவிடர்கள், புனல் நிறைந்த தொட்டியானார்

பார்ப்பனர்கள். அவர் தம் இல்லத்தரசிகள் 'சதிராடு தேவடியாள்' போலானார்கள்.

ஆனால் உழைக்கும் மக்கள்—பிர்மாவின் நெற்றியில் பிறந்த பிராம்மணர்களின் மாபெரும் சிந்தனையில் பிறந்த—வேதத்தின் வேதாந்த விருத்தியால்—உபநிசத்துக்களால்—ஸ்மிருதிகளால் பத்தாயிரம் ஆண்டுகளாக எங்கெங்கோ உலகில் நாகரிக வளர்ச்சியடைந்த மக்கள் வாழ்ந்தனரோ—அவர்களும் திராவிடர்களுக்கு—தமிழர்களுக்குத் தொடர்பு உண்டு என்ற புகழ்ச்சிக் குரிய மக்கள்—சூத்திரர்களாக—'பஞ்சமர்களாக' தீண்டத் தகாதவர்களாக ஆக்கப்பட்டனர். அதுதான் நமது வாழ்வு என்ற நம்பிக்கையில் நிலை நிறுத்தப் பட்டனர். இந்தியாவில் இன்று நிலைத்திருக்கும் அனைத்து உயர்வுகளும் பார்ப்பனர்களின் மூதாதையர்களின் அறிவில் உதித்ததே என்று—திராவிடர்களே—தமிழர்களே நம்ப வைத்து விட்டனர்.

இதற்குச் சான்று வேண்டுமானால் 'மனுநீதி' என்ற பெட்டகத்தைத் திறக்கக் கூடிய 'சாவி', கிடைக்கப் பெற்றால் அதைத் திறந்து பாருங்கள். பெட்டகத்தின் 'இதயத்திலிருந்து' 'சோ' வென்று அமுத மழை பொழியும்.

அமுதத்தின் சில துளிகள்

சூத்திரன் 'வேத'த்தைப் படித்தால் அவன் நாக்கை வெட்ட வேண்டும்.

வேதம் படிப்பதை ஒரு சூத்திரன் அவன் காதால் கேட்டால், அவன் காதில் (பிராமணர்) ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்.—மனுதர்மம்

'ஒருவர் சண்டாளரைத் தீண்டுவராயின் அவர் ஸ்நானம் செய்ய வேண்டும்''

—பவுதாயனர்

சண்டாளரும் தீண்டாதாரும் நமக்குச் சிறிது தூரத்திலேயே இருக்க வேண்டும். அவர் நிற்கும் இடம் ஒரு பசு வாலை ஆட்டும் தூரத்திற்கு குறைவாக இருக்குமாயின், நாம் இடுப்பில் கட்டிக் கொண்டிருக்கும் துணியுடன் ஸ்நானம் செய்ய வேண்டும், — வியாக்ரபாதர்.

ஒரு சில அமுதத் துளிகளைத் தந்தேன்.

நான் எதற்காக இந்தச் சிறு கட்டுரையை எழுதத் தொடங்க முற்பட்டேனோ அதற்குச் செல்லுகிறேன்.

நம்மைப் பொருத்தவரை தமிழ் நர்ட்டில் தமிழர்—பார்ப்பனர் சண்டை தெருவுக்கு வந்து விட்டது. இதை மறைப்பதில் பொருள் இல்லை. நாடறிந்த உண்மை இது. இந்தச் சண்டை தேவைதானா என்பதுதான் கேள்வியே தவிர வெற்றி தோல்வி யாருக்கு என்பதல்ல.

என்னைப் பொருத்த வரையில் இந்தச் சண்டை மிக மிகத் தேவை

இந்தச் சண்டையில் தமிழகத்தில் உள்ள நிலப்பிரபுத்துவத்தை நிலைநிறுத்திக் கொள்ள—தமிழக நிலப்பிரபுக்கள் 'பெருமுதலாளிகள் அவர்களைச் சார்ந்த சாதியைச் சேர்ந்த உறவினர்கள் பார்ப்பனர் பக்கத்தில்தான் இருப்பார்கள்.

தமிழர் பக்கம் நிற்கப்போகின்றவர்கள் மிகச் சிலரே வேலை வெட்டி இல்லாத ஒடுக்கப்பட்ட கூட்டம் மட்டுமே நிற்கும். பெரியாரராலே, அவரது உழைப்பாலே தங்களை உயர்த்திக் கொண்ட தமிழர்கள், வேலை வாய்ப்பில் உயர்ந்தவர்கள். நிச்சயமாக, முடிவாகச் சொல்லுவேன். நமது பக்கம் வரமாட்டார்கள்.

இன்று பார்ப்பனர் இந்த உண்மையை நன்கு உணர்ந்தவர்கள். ஒரு சிறு கூட்டமாக நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'நாவலந்தீவுக்குள் புகுந்தவர்கள்-இன்று வரை வெற்றி பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொருத்தவரை அவர்கள் தோற்றதுபோல் நடித்துக்கொண்டு 'ரோட்டுக்கு' வந்துவிட்டார்கள்.

1863ல் வங்காளத்தில் பிறந்த ஒரு 'சூத்திரன்' விவேகானந்தன் என்ற பெயரால் 'இந்து' மதத்தின் பெயராலேயே பார்ப்பனரின் போக்கைக் கொஞ்சம் கடுமையாகவே கண்டித்துள்ளார். விவேகானந்தரின் கண்டனமும் பார்ப்பனரின் அடிப்படையை ஆட்டங்கொடுக்கச் செய்யவில்லை

அடுத்து குசராத்து நாட்டில் போர்பந்தரிலே மற்றொரு 'சூத்திரன்' 1869ல் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். அவர் 'மகாத்மா' என்ற பெயரால் தேசிய இயக்கமான காங்கிரசில் இருந்துகொண்டே 'பார்ப்பனர்களின்' இறுமாப்பை காரசாரமாகவே கண்டித்தார். அவருடைய கண்டிப்பும் அவர்களின் போக்கை மாற்றச் செய்யவில்லை. காரணம் காந்தியாரும் பார்ப்பனர்களுடைய நால்வருணக் கொள்கையையும் சமய வழியையும் போற்றினார். அப்படி இருந்தும் ''மகாதந்திரசாலியான'' பார்ப்பனர் அவருடைய ஒரு சில போக்கில் சந்தேகம் கொண்டனர். நாடு சுதந்திரம் அடைந்தபின் ஆங்கிலேயர் பக்கம் உள்ள போர் முறையை, எங்கே நமது பக்கம் திருப்புவாரோ என்று கூர்ந்து கவனித்தனர். அவர்கள் கவனிப்பில் ஓரளவு உண்மையைப் புரிந்து கொண்டனர்.

காந்தியாரும் ஒரு சில இடங்களில் ஒரு சில நேரங்களில் ''என்னுடைய சாவின் முடிவைக் கொண்டுதான் நான் யார்

பக்கம் என்று 'சூத்திரர்கள் புரிந்து கொள்வீர்கள்' என்று கூறிக்கொண்டிருந்தார். ஆம் நாதுராம்கோட்சேயின் குண்டுக் கிறையான பின்புதான் நம்மால் புரிந்துகொள்ளமுடிந்தது.

1975ல் பாட்னாவில் நடந்த அகில உலக சமாதான மாநாட்டிலும் CIA நிறுவனத்தின் சதியால் உயிர் நீத்தவர்கள் பட்டியலிலே காந்தியார் பெயர்தான் முதலில் பொறிக்கப் பட்டிருந்தது.

மேலும் ஒரு 'சூத்திரன்' தமிழகத்தில் 1879 செப்டம்பர் 17ல் ஈரோட்டு நகரத்தில் பிறந்து 'பெரியார்' என்ற பெய ரால் 1974ம் ஆண்டுவரை நம்மோடு நமக்காக வாழ்ந்து வந்தார்.

ஆனால் இவர், மற்ற இருவர்களைப் போல இல்லாமல் வேறு ஒரு போர் முறையைக் கையாண்டு-பார்ப்பனர்கள்மேல் போர் தொடுத்தார்.

பார்ப்பனர்கள் இதுவரை இம்மாதிரியான போர் முறையைச் சந்தித்ததே இல்லை. பார்ப்பனர்களுக்கு எது மூல ஊற்றோ அதில் கை வைத்தார்.

தமிழர்களுடைய, அறியாமை, மூடநம்பிக்கைகள், சாதி வேற்றுமை, மொழியுணர்வுஇல்லாமை குறிப்பாக 'சுய மரியாதை' இன்மை ஆகியவற்றைப் போக்க, பேச்சில் இல் லாமல் செயலில் உருவம் கொடுத்தார். சீறி எழுந்தார் பெரியார் :

'சூத்திரன்' என்றால் ஆத்திரம் கொண்டு அடி என்றார். அதற்குப் பயந்து பார்ப்பனர் சும்மா இருக்கவில்லை. அவர் களில் ஒரு தலைவர் அடி பார்க்கலாம் என்றார். புதுக் கோட்டையில் அழுகிய முட்டையாலேயே அடித்தார்கள்

பெரியாரின் தொண்டர்கள். அடி பார்க்கலாம் என்றவரும் அடிபட்டவரும் ஒருவரே. அவர்தான் திருவாளர் சத்திய மூர்த்தி அய்யர்.

அன்று தொடங்கி இன்று வரை ஒருநாளும் அடி பார்க்கலாம் என்று அவர்களும் சொல்லவில்லை. பெரியாரின் தொண்டரும் சாதாரணப் பார்ப்பனச் 'சிசு'வின் மேல் கூட ஒரு தூசிகூடப் படச் செய்ததில்லை. இதுதான் நாடறிந்த உண்மை.

ஆனால் நாலாயிரம் ஆண்டுகளில் பார்ப்பனரின் இறுமாப் பின் மேல் வெற்றிக்கொண்ட ஒரு தமிழன்; திராவிடனின் வாரிசு தந்தை பெரியார்தான்.

பெரியாரால் ஆதரிக்கப்பட்ட காமராசர் காலத்தில் ஏற்பட்ட கல்வியின் விழிப்புணர்ச்சியால்-பார்ப்பனர்களுக்கு ஏகபோக உரிமையாக இருந்த அரசுப் பதவிகளில் ஓரளவு போட்டிபோடத் தொடங்கி வெற்றிபெற்றுக் கொண்டு வருகின்றனர். அதைப் பொறுக்க முடியவில்லை பார்ப்பனர் களால்.

காமராசருக்குபின் வந்த தமிழக முதல்வர்கள் குறிப்பாக திமுக அதிமுக என்ற பெயரால் 'பெரியார் வாரிசுகள்' என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களின் பலவிதமான பலவீனங் களால் பெரியாரின் எண்ணங்கள் மீண்டும் தோல்வி அடையத் தொடங்குகின்றன.

கீழ்த்தரமான ஆசைகளுக்கும், நிலையில்லாத பட்டம் பதவிகளுக்கும் ஆசைப்பட்டு-தமிழர்களுக்குச் செயல்படுவது போல் நடித்துக்கொண்டு பார்ப்பனர்களுக்கு நன்மைதரக் கூடிய செயல்களையே செய்துகொண்டு இருக்கிறார்கள் என் பதை நாடறியும்.

எனவே நாம் பார்ப்பனர்களின் சூழ்ச்சியிலிருந்து வெற்றி பெற வேண்டுமானால் அரசியல் கட்சிகளிலிருந்து தொடர்பு அற்று தனித்துப் போர் தொடுக்கவேண்டும்.

பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும். அவர்களுக்கு அஞ்சி 'பெரியாரின் வாரிசுகள்', என்று தங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற இரட்டை வேடங்களையும் அப்பாவி மக்களுக்கு இடைவிடாது எடுத்துச் சொல்லுகின்ற வேலையை, நாம் தொடங்கவேண்டும்.

சுருங்கச் சொன்னால் புத்தர் தொடங்கியதுபோல் முற்றும் துறந்த வாழ்வை நடத்தத் துணிச்சலுள்ள இளைஞர்கள் தேவை. அவர்கள் கிடைப்பார்களா? ஒன்றியத்துக்கு ஒருவர் தேவை.

பெரியாரைச் சாடுகின்றவர்கள் விவேகானந்தரும் காந்தியாரும்-பார்ப்பனர்களைப் பற்றிக் கூறியிருப்பவைகளைக் கீழே காண்பார்களாக.

விவேகானந்தரும் பார்ப்பனரும்

'பிராமணர்கள் தம் பிறப்பைப்பற்றி பொய்யான வீண் பெருமை கொண்டாடி வருகின்றனர். பெரிதும் வேண்டாத விதண்டா வாதம் புரிந்து பிறப்பைப்பற்றி இத்தகைய வீண் பெருமையையும் இந்த வீண்பெருமையால் இயற்கையாக ஏற்படுகிற சோம்பலையும் வளர்க்கின்ற எந்தச் சூழ்ச்சிகளையும் பிராமணர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

பிராமணர்களே! இது சாவிற்கு உரிய அறிகுறி என்பதை உணர்ந்து எச்சரிக்கையோடு இருங்கள்! எழுந்திருங்கள்! உங்களைச் சுற்றியுள்ள பிராமணர் அல்லாதார்களை உயர்த்துவதன் மூலம்-நீங்கள் அவர்களுக்கு தலைவர்கள்என்ற முறையில் அல்ல,மூடக்கொள்கைகள், கீழ்நாட்டு, மேல் நாட்டு, ஏமாற்றுத் தன்மைகள் என்ற புழுக்கள் நெளிகின்ற இறு

மாப்பு என்ற அழுகிய புண்ணோடு அல்ல-பணியாளன் என்ற மனத்தோடு உங்கள் மனஉறுதியைக் காட்டுங்கள்.

ஆரியரைப்பற்றி கூறப்படுகிற கொள்கையிலே இருக்கிற குற்றங்குறைகளையும் அக்கொள்கையால் விளைந்த தீமைகளையும் அமைதியோடு அறவே நீக்கவேண்டுவது தென்னிந்தியாவின் நலத்திற்கு மிகவும் அவசியமாகிறது. அதை நீக்கி ஆரிய இனமும் தோன்றுவதற்குக் காரணமான மிகச் சிறந்த, தாய் இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றான **புகழ்படைத்த தமிழர்களது** பழம் பெருமையை அறிவதால் விளையும் நியாயமான சுயமரியாதையை ஏற்படுத்தவேண்டுவது பிராமணரல்லாதாருக்கு மிகவும் அவசியமானது.

ஆதிகாலத்துத் தமிழர்கள் ''அக்கேடோ—சுமேரியர்''களது இனத்தைச்சார்ந்தவர் என்றகொள்கையை பார்ப்பனர் அல்லாதார் தைரியமாக முன்னணிக்கு கொண்டு வருவதற்காக நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எல்லா நாகரிகங்களுக்கும் முன்னோடியாய் விளங்கிய பெரிய நாகரிகத்தின் இரத்தமானது நம் உடலிலே ஓடிக்கொண்டிருப்பதற்கு நாம் பெருமிதம் கொள்ளுகிறோம்! அந்தத் தமிழர்களது தொன்மையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஆரியர்களும், செமிட்டியர்களும் வெறுங்குழந்தைகளே.

தெரிந்த நாகரிகங்களிலே மிகப் பழமையான நாகரிகத்தினரான, தமிழ் பேசிவந்த முன்னோர்களைப்பற்றி பெருமிதம் கொள்ளுகிறோம்.

எகிப்தியர் குறிப்பிட்ட 'பண்ட்' என்ற நிலமானது நமது மலையாள தேயமே என்பதையும், எகிப்திய இனம் முழுவதுமே மலையாள நாட்டை விட்டு வெளியேறிக் கடல் கடந்து சென்று நைல் நதியின் கழிமுகம் வழியாக வடக்கிலிருந்து தெற்கே சென்று குடியேறினது. அது விட்டு வந்த 'பண்ட்' என்ற பண்டைய இடத்தை ''பாக்கியவான்களாகிய தங்கள்

முன்னோர்களது நாடு'' என அவர்கள் எப்பொழுதும் ஆர்வத் தோடு எண்ணி வந்தார்கள் என்பதையும் நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

—(ஆரியரும்—தமிழரும் என்ற தலைப்பில்)

இந்தியாவின் உயர்குலத்தவர்களே நீங்கள் எவ்வளவு தான் ஆரியர்களின் பரம்பரையில் வந்தவர்களென்று பெரு மிதம் கொண்டாலும் இரவும் பகலும் இந்தியாவின் பழம் பெருமைகளைப் பாடினாலும் பிறப்பின் பெருமை தோன்றப் பெருமிதநடை நடந்தாலும் உங்களுக்கு இன்னும் உயிர் இருப் பதாக நீங்கள் எண்ணுகிறீர்களா? நீங்கள் பல்லாயிரம் ஆண்டு களாகக் காப்பாற்றப்பட்ட **பழம் பிணங்கள்** ஆவீர்கள். உங்கள் முன்னோர் எவரை **நடமாடும் பிணங்கள்**என்று பழித் தனரோ, அவர்களிடையேதான் இந்தியாவின் வீரியம் சிறிது இன்னும் காணப்படுகிறது. நீங்களே (ஆரியர்களே) **உண்மை யான நடயப் பிணங்கள்.** பயனற்றவையும் பழமையால் தேய்ந்து போனதுமான உங்கள் வீடுகளும், சாமான்களும் பொருட்காட்சியில் வைப்பதற்கு ஏற்றவை. இந்தியாவின் உயர்குலத்தோராகிய நீங்கள் மாயையாகிய இவ்வுலகில் உண்மையான பொய்த் தோற்றங்களாகவும், இரகசியப் பொருள்களாகவும், பாலைவனத்தில் காணும் கானல் நீராகவும் விளங்குகிறீர்கள் இறந்த காலமும், அதன் பல வேறுபாடுகளும் ஒருங்கே உருவெடுத்தாற்போலக் காண் கிறீர்கள். நீங்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக எண்ணுவது அசீரணத்தினால் ஏற்படும் பயங்கரமான கனவே அன்றி வேறன்று எதிர்காலத்தின் சூனியமான உருவற்ற உதவாக்கரைகளே நீங்கள்! கனவு உலகில் வாழ்பவர்களே, ஏன் இனியும் வீணில் சுற்றுகிறீர்கள்? இறந்தகால இந்தி யாவின் தசையும், இரத்தமுமற்ற பிணத்தின் எலும்புக் கூடாகிய நீங்கள், ஏன் இன்னும், மண்ணோடு மண்ணாகி விண்ணில் கலக்காமல் இருக்கிறீர்கள்?

நீங்கள் சூனியத்தில் கலந்து மறைந்து உங்கள் இடத்திலே புதிய இந்தியாவை எழச் செய்யுங்கள். கையில் கலப்பை பிடித்த உழவர் குடிசைகளிலும் செம்படவர், சக்கிலியர், தோட்டிகள், ஆகியோருடைய எளிய குடில்களிலிருந்தும் புதிய இந்தியா உயர்வு பெற்றெழட்டும்!

—(அய்ரோப்பிய பயண நினைவுக் குறிப்புகள்,

சென்ற அறுநூறு எழுநூறு ஆண்டுகளாகப் படித்தவர்களும் பெரியவர்களும் என்ன செய்து வந்தார்கள். ஒரு டம்ளர் தண்ணீரை இடது கையால் குடிப்பதா? வலது கையால் குடிப்பதா? கையை மும்முறை கழுவ வேண்டுமா? நான்கு முறை கழுவ வேண்டுமா? அய்ந்துமுறை வாய் கொப்பளிப்பதா? ஆறுமுறை வாய் கொப்பளிப்பதா? இது தானே? இவர் களிடமிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்க முடியும்?

நமது மதம் சமையலறை மதமாகும். "தீண்டாதே; தீண்டாதே" என்று கூறுவோராகிவிட்டோம். நமது மதம் இப்போது சமையலறையில் அடங்கிவிட்டது நமது கடவுள் இப்போது சோற்றுப்பானையில் அடங்கி விட்டார்.! "என்னைத் தொடாதே நான் புனிதன்" என்பதே தற்போது நமது மதமாயிருக்கிறது. இன்னும் நூறாண்டு இவ்விதமே நடைபெற்றால் நாம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியது தான். இந்த நிலையைத் தூக்கி எறிய வேண்டும்.

மேற்கு நாடு உலோபிகளான சைலக்குகளின் பிடியிலே அகப்பட்டுத்தத்தவிக்கிறது. கிழக்குநாடோ குருமார் என்றும், வைதீகர் என்றும், புரோகிதர் என்றும் கூறப்படுவோர் பிடியில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது.

பிராமணன் ஒருவன் மாமிசம் உண்பது கண்டால் மற்றொரு தென்னிந்திய பிராமணன் நடுங்குவான். வட இந்திய பிராமணனோ அதை உயர்வாக எண்ணுவான்.

நூற்றுக்கணக்கான ஆடுகளைப் பலியிடுவான். உங்கள் முப்பத்து மூன்று கோடி தெய்வங்களிலும், இன்னும் அந்நியர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிலும் இன்னும் உங்களுக்கு நம்பிக்கை இருந்து, உங்களுக்கு உங்களிடம் நம்பிக்கை இல்லையானால் உங்களுக்கு கதிமோட்சமில்லை? நாம் முப்பது முக்கோடி மக்களாக இருந்திருக்கிறோம் எனினும் ஏன் இந்தியாவின் மேல் படை எடுத்த அந்நியர்கள் அனைவரும், அவர்கள் மிகக் குறைந்தவர்களாக இருந்த போதிலும் நம்மை வெற்றி கொண்டு வந்திருக்கின்றனர்? அதற்குக் காரணம் அவர்களிடம் தன்னம்பிக்கை இருந்தது. நம்மிடம் அது இல்லை.

இந்த தாழ்ந்த சேவலமான நிலைக்குக் காரணம் நாமே ஒழிய ஆங்கிலேயர்கள் அல்ல என்ற பதில் தான் ஒவ்வொரு தடவையும் எனக்குக் கிடைக்கிறது.

நம்முடைய மேல் சாதியார், சாதாரண மக்களைத் தங்கள் காலின் கீழ் தள்ளி மிதித்து வந்திருக்கிறார்கள். இந்தக் கொடுமையின் காரணமாகத் தங்கள் சக்தியையும் இழந்து, இந்த ஏழை மக்கள், தாங்கள் மனிதர்கள் என்பதைக் கூட அநேகமாய் மறந்து விட்டார்கள் அவர்கள் கேவலம் விறகு வெட்டிகளாகவும், தண்ணீர் இறைப்பவர்களாகவும், தோட்டிகளாவும், மாடுதூக்குவோர்களாகவும், பிணம் எரிப்பவர்களாகவும், இருக்கும்படி பல நூற்றாண்டுகளாகக் கட்டாயப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் அடிமைகளாகவே தோன்றி இருப்பதாகவே, அவர்களை மேல் சாதிக்காரர்கள்—பிராமணர்கள்—நம்பச் செய்தார்கள்.

சிலர் பரம்பரையாக மனப் பண்பிருப்பவர்களுக்குத் தான், உயர்ந்த கருத்துக்களை ஏற்கும் தன்மை உண்டு என்று அசட்டுத்தனமான ஒரு கொள்கையை எடுத்துக்

கொண்டு இவ்வித மிருகத்தனமான வாதங்களைப் பேசி, அவர்களை இன்னும் கேவலமாக நடத்த எத்தனிக்கிறார்கள்.

''அமெரிக்காவில் நடந்த சர்வ சமய மகாசபையில், ஆப்பிரிக்காவில் பிறந்த இளைஞன் ஒருவன் அழகான பிரசங்கம் ஒன்றைச் செய்தான். அவனிடத்தில் எனக்கு அக்கறை உண்டாகி சில சமயங்களில் அவனுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் அப்பொழுது அவனைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. பிறகு இங்கிலாந்தில், சில அமெரிக்கர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது நான் தெரிந்து கொண்டது இது.

அவன் ஆப்பிரிக்காவின் மத்தியிலுள்ள ஓர் ஊரில் ஒரு நீக்ரோத் தலைவனுக்குப் பிறந்தவனாம் மற்றொரு நீக்ரோத் தலைவனுக்கும் இவன் தந்தைக்கும் சண்டை உண்டாகி அதில் இவன் தாய் தந்தையர் கொல்லப்பட்டு, சமைத்தும் உண்ணப்பட்டார்கள். பையனையும் கொன்று சமைக்கவேண்டுமென்று ஓர் உத்தரவு போடப்பட்டது. ஆனால் பையன் தப்பி ஓடிப் பல துன்பங்களுக்கிடையே, பல நூறு மைல்கள் சென்று கடற்கரையை அடைந்து, அங்கிருந்து ஓர் அமெரிக்கக் கப்பலில் அமெரிக்காவுக்குக் கொண்டு போகப்பட்டான். அந்தப் பையன்தான் இந்த அழகான பிரசங்கம் செய்தவன்.

இதைக் கேட்டபிறகு பரம்பரையாகப் படித்து வந்தவர்களுக்குத்தான் படிப்பு ஏற்குமென்ற கொள்கையைப் பற்றி நான் என்ன நினைப்பது.

ஏ பிராமணர்களே! பறையனைவிட பிராமணனுக்கு கல்வி கற்கும் சக்தி அதிகமிருக்கிறதெனில், பிராமணர்கள் படிப்பதற்கு இனிமேல் செலவு செய்ய வேண்டாம். அனைத்தையும் பறையர்கள் படிப்பதற்காகவே கொடுங்கள்.

பலவீனர்களுக்கே எல்லா உதவிகளும் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்களுக்குத்தான் அவை தேவையாக இருக்கின்றன.

பிராமணன் பிறவியிலேயே அறிவுள்ளவனாகப் பிறந்திருந்தால் அவன் தானே படித்துக் கொள்ள முடியும். மற்றவர்கள் பிறவியிலேயே புத்திசாலித்தனம் அற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு எல்லா ஆசிரியர்களும் கல்வி புகட்டட்டும். எனக்குத் தெரிந்த வரையில் இதுதான் நியாயம்.''

—கும்பகோணத்தில் பேசியது

''நான் ஒரு பறையனாகப் பிறந்திருந்தால் இன்னும் அதிமான மகிழ்ச்சியடைந்து இருப்பேன்.''

சமூகத்தில் நான் ஒரு தொழில் செய்யலாம், நீங்கள் வேறு ஒன்று செய்யலாம். நீங்கள் நாட்டை ஆளலாம். நான் செருப்புத் தைக்கலாம். ஆனால் அதன் காரணமாக நீங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. என்னால் ஆள முடியாமல் இருக்கலாம்; உங்களால் செருப்புத் தைக்க முடியுமா? நான் செருப்புத் தைக்கலாம். நீங்கள் வேதம் படிக்கலாம். ஆனால் அதன் காரணமாக என்னை ஏறி மிதிக்க உங்களுக்கென்ன அதிகாரம் இருக்கிறது.

பிராமணர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு பாம்பு ஒருவனைக் கடித்து விட்டால், அவன் பிழைக்க வேண்டுமென்றால் கடித்த அந்தப் பாம்பே அதன் நச்சை உறிஞ்சி எடுக்க வேண்டுமென்ற பழமொழி ஒன்று உண்டு. அதுபோல உங்களால் உண்டாக்கப்பட்ட நச்சினும் கேடானதை நீங்களே—உறிஞ்சி எடுக்க முன்வர வேண்டும்.

பிரமணர்களுக்கு மேலும் ஒரு வார்த்தை கூறுவேன். உங்கள் குலப்பெருமை கூறுதல் வீணே. பிறப்புபற்றிய பெருமிதமும் வீணே. பரம்பரை பற்றிய கர்வமும் வீணே. அதை விட்டொழிப்பீர். உங்கள் சாத்திரத்தின் படி பார்த்

தால் இப்போது உங்களிடம் பிராமணியம் இல்லை. ஏனெனில் நீண்ட காலமாக நீங்கள் மிலேச்ச அரசின் கீழ் வாழ்ந்து விட்டீர்கள். உங்கள் முன்னோர் கூறிய மொழிகளில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் குமாரிலபட்டரைப் போல் துஷாக்கினியில் வீழ்ந்து உங்கள் பாபத்திற்கு பிராயச் சித்தம் செய்து கொள்ளுங்கள். (துஷாக்கினி என்பது உமியைக் குவித்து அதில் மூட்டப்படும் தீ)

புத்தர்முதல் சைதன்யர் ராமகிருஷ்ணர் வரை எல்லோரும் சாதாரணமக்கள் பேசும் மொழியிலேயே அவர் களுக்குப் போதித்தார்கள். அறிவாராய்ச்சியில் சிறந்திருத் தல் நன்றே. ஆனால் அறிவாராய்ச்சிகளைப் பொருள் விளங் காத கரடுமுரடான நடையில் தான் கூறவேண்டுமா? இயற் கையான எளிய எழில்மிக்க நடையை விட்டுச் செயற்கை யான (சமஸ்கிருத) மொழியில் விளக்க வேண்டுமா? வேறு எதன் வாயிலாகவும் விளக்க முடியாதா? மக்கள் மொழியில் கலைக்கு இடமில்லையா? இயற்கையான ஒன்றை விலக்கி இயற்கை அல்லாத மொழியை உண்டாக்குவதால் வரும் பயன் என்ன? உங்கள் அறிவாராய்ச்சிகளைப் பற்றி நீங்கள் வீட்டில் பேசும் மொழியில் எண்ணிப்பார்ப்பது இல்லையா? அவைகளை எழுதும்போது மட்டும் ஏன், நீங்கள் நூதன மான விளங்கிக் கொள்வதற்கு இயலாத மொழியைப் பயன் படுத்துகிறீர்கள்? நீங்கள் உங்கள் மனத்தில் தத்துவ விஞ்ஞானம் பற்றி எண்ணும் மொழி—பொது மக்களுடன் விவாதிக்கும் மொழி—எழுதப்படுவதற்கு உரிய மொழி ஆகாதா? மொழி என்பது கருத்துக்களின் வாகனமே. கருத் துக்களே முக்கியமானது—முதன்மையானது. மொழி அவை களின் பின்னதே.

வயிரம், முத்து இவைகளால் அலங்கரிக்கப்பட்ட குதிரையின் மீது குரங்கை அமர்த்துவதா? பிராமணங்கள், மீமாம்ச தத்துவத்திற்கு ஷாபாரா சுவாமிகள் எழுதியஉரை,

பதஞ்சலியின் மகாபாஷ்யம், சங்கராச்சாரியன் மகாபாஷ்யம் இவைகளின் சமஸ்கிருத நடையைப் பாருங்கள்.

இரண்டொரு அழகிய கருத்துக்களை மலர்க்குவியலிலும், வாசனையிலும் புதைத்து வைக்கும்-முயற்சி நடை பெறுகிறது! மகாகடவுளே! எத்தகைய சொல் அலங்காரங்கள், அணிவகுப்பை அவர்கள் அமைத்துள்ளார்கள். பத்துப் பக்கங்கள் நிறைய அடை மொழிகள், சொற் சிலம்பங்கள். பிறகு திடீர் என்று ''அங்கே ஒரு அரசன் வாழ்ந்தான்'' என்று தொடங்குவதைக் காண்பீர்கள். ஆம்! பெயரடைகள், கம்பீரமான கூட்டுவாக்கியங்கள், சாதுரியமான சிலேடைகள் ஆகியவற்றின் எத்தகைய அணிவகுப்பு! அவைகள் சாவின் அறிகுறிகளே!

ஒவ்வொரு சமுதாய விஷயத்திலும் தலையிடுவதற்கு (அதனால் இலட்சக்கணக்கான மக்களுக்கு துயரத்தை விளைவிப்பதற்கு) குருக்களுக்கும், புரோகிதர்களுக்கும், பூசாரிகளுக்கும் ஏது உரிமை?

உபநிடதங்களை எழுதியவர் யார்? ராமர் யார்? கிருஷ்ணன் யார்? புத்தர் யார்? சைனர்களின் தீர்த்தங்கரர் யார்? அனைவரும் மாமிசம் தின்னும் சத்திரியர்களே. சத்திரியர்கள் சமயப்பிரசாரம் செய்தபோதெல்லாம். எல்லோருக்குமே அவர்கள் பிரசாரம் செய்தார்கள்.

ஆனால் பிராமணர்கள் எதை எழுதிய போதிலும் அதை அறியும் உரிமையைப் பிறருக்கு மறுத்தனர். வியாசரின் சூத்திரங்களைப் படியுங்கள் அல்லது எவரையாவது படிக்கச் சொல்லிக் கேளுங்கள். சூத்திரர்களை ஏமாற்றுவதற்காகவே வேதங்களுக்கு வலிந்து பொருளைத் தருவதற்கு வியாசர் முயல்கிறார்''

''ஒரு மாமிசத்துண்டானது கடவுளதுஅருளாகிய நதியின் போக்கை அணை போலக் குறுக்கிட்டுத் தடைபடுத்தி விடக்

கூடிய அளவுக்குக் கடவுள் என்ன உன்னைப் (பிராமணர் களைப்) போல மூடப்பயங்கொள்ளியா? கடவுள் அத்தகைய பயங்கொள்ளியாய் இருப்பாரானால் அவர் ஒரு காசுக்கும் பொறாதவர் ஆவார்.''

காந்தியாரும் பார்ப்பனரும்

'பிராமணர் அல்லாதார்களே விரும்பினால் நீங்கள் பிராமணர்களைநிந்தியுங்கள். பிராமணர்கள் தந்திரசாலிகள். ஆனால் ஒருபோதும் பிராமணியத்தை நிந்திக்காதீர்கள்''

பிராமணர்களுக்கு நான் கூறுவது இதுதான்: ''நீங்கள் அறிவுக் களஞ்சியங்களாக இருக்கிறீர்கள்! தியாகமே உருக் கொண்டவர்களாக இருக்கிறீர்கள்! யாசக வாழ்வையே நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். எனவே பிராமணர் அல்லாதார் விரும்புவதையெல்லாம் விட்டு விடுங்கள். அவர்கள் உங்களுக்கு எதை மீதி வைக்கிறார் களோ அதைக் கொண்டு மாத்திரம் திருப்தி அடையுங்கள்'' ஆனால் அவரது தருமத்தை யொட்டி எனது பிராமணரல் லாத விளக்கத்தை நவீன பிராமணர் உடனடியாக நிரா கரித்து விடுவார் என்பதை நான் அறிவேன்.

இன்று தஞ்சாவூருக்கு வந்ததும் பிராம்மண— பிராம்மணரல்லாதார் பிரச்சனை பற்றி விவாதிக்கவேண்டு மென எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன. விவாதம் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்...விவாதிப்பதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்போது நான் இந்த இயக்கத்தை (பிராம்மணரல்லாத இயக்கத்தை) ஓரளவு நன்கு அறிந்து கொண்டேன். இவ்விஷயமாக எனது தாழ்மையான கருத்தை அந்த நண்பர்களிடம் கூறினேன். அவர்களுக்கு அதை இஷ்டம் போல் உபயோகித்துக் கொள்ள உரிமை உண்டு. ஆனால் விவாதத்தின் தொடக்கத்திலிருந்தே கடைசிவரையில் இந்த நண்பர்களுக்கு வேதனை அளிக்கும்

ஒரு விஷயத்தை கவனித்தேன். பரம்பரையாக உயர்வு தாழ்வு அபிப்ராயத்தை நான் ஆதரிப்பதாக அவர்கள் நினைப்பது போல் தோன்றியது. அந்த எண்ணம் எனக்கு அறவே கிடையாது என்று உறுதி கூறினேன். **எனது அபிப்ராயத்தில் பரம்பரை உயர் வென்றோ, அல்லது தேடிச் சம்பாதித்த உயர் வென்றோ எதுவுமில்லை.**

தென்னாப்பிரிக்காவில், இந்த உயர்வு மனப்பான்மைக் கொள்கையை நான் அங்குலம் அங்குலமாக எதிர்த்துப் போராடியிருக்கிறேன்.

பிராமணர்கள் தங்களுடைய பிறப்பு காரணமாகவோ, அல்லது பிறகு தாங்கள் தேடிக்கொண்ட அறிவு காரணமாகவோ, உயர்ந்தோர் என்று உரிமைகொண்டாடும் இடங்களில் எல்லாம் நான் அவர்களை எதிர்த்து வந்திருக்கிறேன்' யாராயினும் தம்மைப் போன்ற ஒரு சகோதரரைக் காட்டிலும் தாம் உயர்ந்தவரென உரிமை கொண்டாடுவது மனிதத் தன்மையற்றதென்றே கருதுகிறேன்.

இந்த உயர்வு மனப்பான்மை அரக்கனை எதிர்த்துப் போராடும் ஒவ்வொரு பிராம்மணரல்லாதாருக்கும் நான் பக்க பலமாக இருந்து அவரை முற்றிலும் ஆதரிக்கிறேன்,

எங்இந்தியா 29-9-1927

பிராமணர் உங்கள் (பிராமணரல்லாதாரின்) உரிமைகளை ஆக்கிரமித்துக் கொள்ளும்போது அவரை அங்குலம் அங்குலமாக எதிர்த்துப் போராடி அவரைச் சீர்திருத்தச் செய்யுங்கள்.

சீர்திருத்தத்தின் விரோதிகளை எதிர்த்து நில்லுங்கள். நீங்கள் கற்றறிஞர்களாக இராமலும், உண்மையான மதத்தை எங்களுக்கு உபதேசிக்கத் திறமையில்லாமலும்,

செல்வத்தையும், அதிகாரத்தையும் நாடிச் செல்லுவீர்களாயின் உங்களை நாங்கள் பிராமணர்கள் என்று அழைக்க மாட்டோம்'' என்று அவர்களிடம் கூறுங்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் தீண்டாதாருடன் உறவு கொண்டாடுவேன். சொந்த சகோதரருடன் எவ்விதம் நடந்து கொள்ளுவேனோ அதுபோலவே தீண்டாதாருடனும் நடந்து கொள்ளுவதுடன் சிறிய சாதிகளையும் பிரிவுகளையும் தூள் தூளாக உடைத்து எறிந்து விடுவேன்.

என் பையனுக்குக் கலியாணம் செய்யும்போது, நான் சம்பிரதாய வழியிலிருந்து விலகி, மற்ற உட்பிரிவுகளைச் சேர்ந்த பெண்ணையே நாடிச் செல்வேன். இன்று நாம் உண்மையில் படுமோசமான வழக்கத்தினால் கட்டுப்பட்டு கண்மூடித்தனமாக இருந்து வருகிறோம். எனவே குஜராத்தில் கல்யாணம் செய்து கொண்டு குடியேறுவதற்கு நீங்கள் ஒரு பெண்ணைத் தரமாட்டீர்கள். குஜராத்திலிருந்து தமிழ் நாட்டில் ஸ்தாபிக்கக நீங்கள் ஒரு பெண்ணை எடுத்துக் கொள்ளவும் மாட்டீர்கள்.

மற்ற மூன்று வர்ணங்களைவிட நான் உயர்ந்தவன் என்று பிராமணர் கூறினால் அது இறுமாப்புத் துணிச்சலேயன்றி வேறல்ல.

இன்று தாங்கள் பிராம்மணரின் கடமைகளைச் செய்வதாக அகந்தைகொண்டு மதத்தை உருக்குலைக்கும் புரோகிதர்கள் இந்து மதத்தையோ, பிராமணீயத்தையோ பாதுகாக்கும் காவலர்கள் அல்ல மனமாரத் தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் தாங்கள் உட்கார்ந்திருக்கும் மரத்தின் வேரையே கோடரியால் வெட்டி வருகிறார்கள்.

சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு அச்சிடப்பட்டுள்ள ஒவ்வொன்றும் சாஸ்திரமென்றும், அதற்கு நாம் கட்டுப்பட வேண்டும் என்றும் நம்பி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்

66927

கூடாது. ஒழுக்க சம்பந்தமான மூலாதாரக் கொள்கைகளுக்கு விரோதமாயிருப்பதையும், அனுபவப்பூர்வமான பகுத்தறிவுக்கு முரணாக இருப்பதையும் சாஸ்திரமென்று-அது எவ்வளவு பழமையானதாக இருந்தாலும் சரி ஏற்றுக் கொள்ள முடியாது.

"பிராமணர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டவர்களுக்கு அக்கூட்டத்தில் நான் வேண்டுகோள் விடுத்தேன். நம்மை பிரிட்டிஷார் எவ்வளவு பேய்த்தனமாக நடத்துகிறார்களோ அதுபோலவே பிராமணர்கள் பிராமணரல்லாதாரைப் பேய்த்தனமாக நடத்துகிறார்கள் என்பது எனது அபிப்ராயம் என்று அவர்களிடம் குறிப்பிட்டேன்.

பஞ்சமர்கள் சென்னை மாகாணத்தைப்போல் வேறெங்கும் அவ்வளவு கொடுமையாக நடத்தப்படுவதில்லை. அங்கே பஞ்சமரின் நிழல்கூட பிராம்மணரை அசுத்தப்படுத்தி விடுகிறது! அவர்கள் பிராமணத்தெருக்கள் வழியாகக்கூட போகக் கூடாது. பிராமணரல்லாதாரும் அவர்களை அப்படியேதான் நடத்துகிறார்கள். **பஞ்சமர்கள் இவவிருவர்களுக்குமிடையே அகப்பட்டுக்கொண்டு அணு அணுவாக நசுக்கப்பட்டு வருகிறார்கள்.**

சென்னை மாகாணத்தவர்கள், நெற்றியில் நாமங்கள், விபூதிப்பட்டைகள், நீண்ட குடுமிகள், சட்டையின்றி திறந்த சுத்தமான உடல்கள் இவைகளுடன் ரிஷிகளைப் போல் விளங்குகிறார்கள். ஆனால் அவர்களுடைய மதம் இந்த வெளிச்சடங்குகளுடன் முடிந்துவிட்டதுபோல் தோன்றுகிறது.

தென்னாப்பிரிக்காவில் நம் நாட்டு மக்கள் நடத்தப்படும் விதத்தைக் குறித்து நாம் ஆத்திரம் அடைகிறோம். ஆனால் இந்துக்களான நாம் நம் சொந்த மதத்தையே சேர்ந்த அய்ந்தில் ஒரு பகுதியினரை, நாய்களைக் காட்டிலும் மோசமாக

நடத்துவதில் உள்ள முரண்பாட்டைக் கவனிப்பதில்லை. நாய்கள் தீண்டாதவை அல்ல. நம்மில் சிலர் இப்போதெல் லாம் நாய்களை வீட்டிற்கு உள்ளேகூட வைத்துச் சீராட்டு கிறார்கள்.

ஆலயம் மூடநம்பிக்கைக்கு நாற்றங்காலாக இருந்து வருகிறது. ஆலயத்தை குருக்கள்மார்கள் வியாபாரச் சந்தை யாக மாற்றியுள்ளனர். முடிவாக கோவில் என்பது விபச்சார விடுதிதான்.

டாக்டர் அம்பேத்காரை பிராமணர் என்றே நான் வெகு காலம் நினைந்து வந்தேன். அறிவிலும் ஆற்றலிலும் நம்மில் மேலானவர்களாக இருப்பவர்களுக்கு இணையானவர் அவர். படித்தவர்களும் புத்திசாலிகளுமான ஆயிரக்கணக்கான சாதி இந்துவைக் காட்டிலும் மிகச் சிறந்தவர். அப்படி இருந்தும் அவர்தொட்டால் ஒரு வைதிகப் பிராம்மணர் அசுத்தமாகி விடுவார். அதற்குக் காரணம், அவர் ஒரு தீண்டாதாராகப் பிறந்துள்ளார் என்ற அவரது மன்னிக்க முடியாத பாவம் தான்!

வைக்கம் சத்தியாக்கிரகத்தினர்மீது தாக்குதலை நோக்கும்போது வைதீகர்கள் பெரும்பாலும் ஈவிரக்கமின்றி எதுவும் செய்ய முற்படுவர்கள் என்பதை எல்லோரும் அறிவர்.

நமது மதத்தில் மிகுந்த ஊழல் படர்ந்திருக்கிறது. நம் நாடு சோம்பேறிகள் அடங்கிய நாடாகிவிட்டது. நமது நடவடிக்கைகளில் தன்னலமே ஆதிக்கம் செலுத்துகிறது. நம்மில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களிடையேகூட பரஸ் பரம் பொறாமை தாண்டவமாடுகிறது.

நான் இருபது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவில் வசித் திருக்கிறேன். அங்கே ஒவ்வொரு இந்தியரும் பறையராகவே நடத்தப்படுகிறார்கள். ஆகையால், இயற்கையல்லாத இவ்

வகையில் நடத்தப்படுவதால் மனம் எவ்வளவு உணர்ச்சி அற்றதாக ஆகிறது என்பதை நான் அறிவேன். உணர்ச்சியை நான் என்றும் இழந்துவிடவில்லையெனினும் எனது நிதானத்தை திரும்பவும் அடைவதற்கு கொஞ்சகாலம் ஆயிற்று. பொதுவாக அய்ரோப்பியர் நடுவில் என்னை நான் ஒரு விசித்திரமான பிறவியாகவே உணர்ந்தேன். இந்தியாவில் ஹரிஜனங்களின் கஷ்டம் அதைவிட இன்னும் மோசமானதாக இருக்கிறது.

ஒரு பிராமணர் இல்லாமலேயே ஒரு 'பங்கி' (தோட்டி) இருந்து வரமுடியும். ஆனால் 'பங்கி' இல்லாவிட்டால் பிராம்மணர் இருந்து வரமுடியாது. சமூகம் வாழமுடியும்படி செய்பவர் 'பங்கி'யே. ஒரு தாய் தன் குழந்தைக்கு என்ன செய்கிறாளோ அதை ஒரு 'பங்கி'—தோட்டி—சமூகத்திற்கு செய்து வருகிறார். பிராமணர் பொதுவாகத் தனது கடமையை அனுசரித்து நடந்து கொள்ளுவதில்லை. ஆனால் 'பங்கி' தனது கடமையை அனுசரித்தே நடந்து வருகிறார் என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை

ஆகையால் பிராமணர்களுக்கும் 'பங்கி'—(தோட்டி) களுக்குமிடையே இருந்துவரும் அநியாயமான பாகுபாடு நீக்கப்பட்டாலன்றி, நமது சமூகம் ஆரோக்கிய வாழ்வையோ சுபிட்சத்தையோ, அமைதியையோ ஆனந்தத்தையோ அடையவே முடியாது. இதை எந்தவிதமான தயக்கமோ சந்தேகமோ இன்றி நான் கூறுவேன்.

முதலில் நாடு சுதந்திரம் ,பெற்றுவிட்டால். சமூக சீர்திருத்தம் பிறகு தானே ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவதை நான் அறிவேன். இது தவறான கருத்து.

தீண்டாமை என்ற பாவத்தை அனுசரிக்கும் ஆடம்பரத்திற்காக நாம் கொடுத்துவரும் கூலியைக்கொண்டே பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு நன்றாகச் சாப்பாடு போட்டுவிடமுடியும்.

நம்மிடம் இல்லாத நியபழக்கங்கள் எதுவும் ஹரிசனங் களிடம் இருந்துவிடவில்லை.

இத்தனை ஆண்டுகளாக நாம் உட்கார்ந்து கொண்டு வந்திருக்கும் உச்ச நிலையிலிருந்து நாம் இப்பொழுது இறங்கி ஹரிசனங்கள் உள்ள இயற்கையான நம் இடத்திற்கு நாம் வந்தாகவேண்டும்.

ஹரிசனங்களை ஒதுக்குவதை விடாமல் செய்துவருவார் களானால் 'தீண்டாதார்' அவர்களுக்கு எதிராகப் புரட்சியில் இறங்கிவிடும் காலம் வந்தே தீரும்.

மனிதன் சோற்றுக்காக மாத்திரம் வாழவில்லை. சோற்றைவிட சுயமதிப்பே முக்கியம்.

சமூக உறவு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலுமே ஒரு தோட்டி பிராம்மணருக்கு சமம் என்று இருக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் நாள்தோறும் நூற்றுக்கணக்கான பசுக்களை கொல்லுகிறார்கள். இவர் களிடம் நாம் ஒன்றும் சொல்லுவதில்லை. தமது ஆங்கில விருந்தாளிகளுக்கு மாட்டு இறைச்சி உணவு ஏற்பாடு செய்வ தற்கு நமது ராசாக்கள் தயங்குவதில்லை. எனவே நமது பசுக்காத்தல், அவைகளை முகமதியர்களிடமிருந்து காப் பாற்றுவதுடன் நின்று விடுகிறது.

திலகமிடுவது, மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பது, ஸ்தலயாத்திரை செய்வது, சாதிக்கட்டுப்பாடு விதிகளை எள்ளளவும் வழுவாது அனுசரிப்பது முதலியவற்றைக்கொண் டெல்லாம் ஒருவரை இந்து என்று கூறமுடியாது.

அதிருஷ்ட வசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ இந்து மதத்திற்கு அதிகாரப்பூர்வமான கோட்டுபாடுகள் கிடை யாது.

இங்கிலாந்தில் நாவிதர்கள் நமது தலைமுடியை வெட்டிக் கொண்டிருக்கும்போது அவர்களுடன் அரசியலைப்

பற்றி நாம் விவாதிக்க முடியும். இங்கு நமது குடும்பத்தி லுள்ளவர்களுடன் கூட நாம் அப்படிச் செய்ய முடியாது. அவர்கள் விஷயம் தெரியாதவர் என்பதனால் அல்ல. அவர் களுக்கு பல விஷயங்கள் தெரியும் மகாபாரதம், ராமா யணம், புண்யஸ்தலங்கள், பற்றித் தான் தெரியும். நமது மக்களுக்கு நாட்டு அரசியல் நடப்பைப்பற்றி ஒன்றுமே தெரி யாது. நாமும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை.

தெய்வீக நூல்கள் என்று கூறப்படும் புத்தகங் களில் பிராமணர்களுடைய இனத்திற்கு உதவியாக இருப்பதற்கா, உண்டாக்கப்பட்ட விதிகளையே அதிகம் காண்கிறோம். பிராம்மணர்கள் தெய்வீக ஞானத்தின் உண்மையான காவலர்கள் என்று அவர்கள் நமக்குக் கற்பித்திருக்கிறார்கள்

வேதங்களின் எழுத்துக்களை மாத்திரம் இறுகப் பற்றிக் கொண்டிருப்பார் ஒரு வேதியர். அதாவது வேதபுத்தக பக்தியுள்ளவராவார். அதிலுள்ள தத்துவத்தை உணர்ந்து கொண்டவராகமாட்டார்.

வேதங்களை நன்கு அறிவதால் மாத்திரம் நமது பிராமணர்கள் ஆத்மீக போதகர்கள் ஆகிவிட முடியுமாயின் வேதங்களை வியாக்கியானம் செய்துள்ள மாக்ஸ்முல்லர் அல்லவா ஆன்மீக குருவாகியிருப்பார்.

நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் வறுமை தாண்டவ மாடுவதை நான் பார்க்கிறேன். இந்தியாவில் எலும்புக் கூடுகள் போலிருக்கும் ஏழைகள் யாவருக்கும் உணவும் உடை களும் அளித்தால் ஒழிய அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் சமயத்திற்கு அர்த்தமே இல்லை. அவர்கள் இன்று ஆடு மாடு களைப் போல் வாழ்ந்து வருகிறார்கள் அதற்கு நாம் தான் (இந்துக்கள்) பொறுப்பாளியாவோம்.

கடவுளின் எல்லையற்ற கருணையில் யாருக்காவது சந்தேகம் இருக்குமாயிள் அவர்கள் காசிக்குப் போய் பார்ப் பார்களாக. மகாயோகியான கடவுள், தம் பெயரைக்

கொண்டே செய்யப்படும் எவ்வளவு வஞ்சகங்களையும் அதர் மங்களையும் சகித்துக் கொண்டிருக்கிறார் காசி கோவிலைப் பற்றிய அனுபவமும் எனக்கு உண்டு. தரிசிக்க வரும் மக்களும் நன்றாக நடந்து கொள்ளுவதில்லை பூசாரிகளோ பேராசை பிடித்தவர்களாக இருக்கிறார்கள்.

12-2-47ல் நவகாளியில் காந்தியார் கூறியது.

''பிராமணர், சத்திரியர், வைசியர், ஆகிய மூன்று பிரி வினரும் சாதி இந்துக்களானால் அவர்கள் சிறுபான்மைக் கட்சியினர் ஆவார்கள். அவர்கள் பிரிட்டிஷார் வெளியேறி இந்தியாவில் சுதந்திரத்தை நிலைநாட்டியபின் இருந்த இடம் தெரியாமல் அவர்கள் அழிந்தே போக வேண்டியதுதான்''

இப்படிக் கூறியவரை கோட்சே கொலை செய்தது குற்றமா? என்கிறது கோட்சே கும்பல்.

பாரதியும் பார்ப்பனரும்

''பார்ப்பானை அய்யர் என்ற காலமும் போச்சே''

''இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார்—அவர்
ஏது செய்தும் காசு பெறப் பார்ப்பார்''

''பிள்ளைக்குப் பூணூலா மென்பான்—நம்மை
பிச்சுப் பணம் கொடெனத் தின்பான்
கொள்ளைக்கே சென்றாலும் வஞ்சம்—செய்து
கூசாமல் வாங்கிடுவான் லஞ்சம்''

''பேராசைக் காரனடா பார்ப்பான்—ஆனால்
பெரியதுரை என்னில் உடல்வேர்ப்பான்
யாரானாலும் கொடுமை செய்வான்—பணம்
அள்ளியிட வில்லையெனில் வைவான்''

''தப்பாக வேதம் சொல்ப வனைக்காட்டிலும்நன்றாசச்
சிரைப்பவன் மேல் குலத்தான் என்று கூவு''

என்று எழுதியவர் 'ஈரோட்டு நாயக்கனின்' மாமனும் அல்ல மச்சானும் அல்ல.

'காந்தி சூதனன்' அதாவது கோட்சே இனத்தவரான—பாரதியார் என்பதை நினைவூட்டுகிறேன்.

சென்ற மாதம் சென்னையில் நடந்த ''அகில இந்திய பிராமணர் சம்மேளனத்தில் நானும் கலந்து கொண்டேன். அவர்கள் அந்த மாநாட்டை நடத்த உரிமையுண்டு. நாம் அதைப் பற்றி ஏதும் எழுத விரும்பவில்லை.

ஆனால் ஒரு செய்தி. இரண்டாம் நாள் காலையில் பலர் பேசினர். உத்திரப் பிரதேசத்தில் இருந்து கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். திருவாளர் மிஸ்ரா அவர்கள். ''பார்ப்பனர்கள் எவ்வளவு நச்சுத்தன்மை கொண்டவர்கள்'' என்பதை அவருடைய ஒவ்வொரு சொல்லிலிருந்தும் நான் அறிந்து கொண்டேன்.

''பிராமணர்கள்தான் அறிவிலும் சிந்தனையிலும் உயர்ந்தவர்கள். இந்த நாட்டில் உள்ள உண்மையான அறிவாளிகளும், படித்தவர்களும் பிராமணர்கள் தான். பிராமணர்களை விடத் தரத்திலும், அறிவிலும் குறைந்தவர்களால்தான் இந்த நாடு இன்று ஆளப்படுகிறது. எனவே தான் இந்தியநாடு மிகக் கீழான நிலையில் உள்ளது''.

''பிராமணர்கள்தான் அறிவாளிகள் என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு. இந்தியா முழுமையும் நடந்து கொண்டிருக்கின்ற தினசரி வார—பத்திரிகைகளை பார்ப்பீர்களேயனால் அதனுடைய ஆசிரியர்கள், மிஸ்ரா-தேசாய், முன்சி சர்மா, அய்யர், அய்யங்கார் என்றே இருக்கிறது. எனவே பார்ப்பனர்களாகிய நாம், இந்த உயர்வை எந்த விலை கொடுத்தாவது நிலை நிறுத்த வேண்டும், பிராமணர்கள் தங்கள் பெயருக்கு முன்பு இனிமேல் ஸ்ரீ என்று (தற்போது தமிழில் திரு என்கிறார்கள் இதெல்லாம் என்னமோ— சிரிப்பு)

போடக் கூடாது. பண்டிட் என்று ஒவ்வொருவரும் தங்களுடைய பெயருக்கு முன்பால் போட்டுக் கொள்ளவேண்டும்'' என்று மட்டுமே மிக அடக்கமாகப்! பேசினார். மற்றவர்கள் பேச்சு இந்த வட்டத்துக்குள்ளேயே அடங்கி இருந்தது.

எழுபத்தோரு வயதான ஸ்ரீ—தவறு—பண்டிட் மிஸ்ரா அவர்களின் பேச்சைக் கேட்டவுடன் எனக்கு நாலடியாரில் ஒரு செய்யுள் நினைவுக்கு வந்தது.

''கடுக்கெனச் சொல்வற்றாம்; கண்ணோட்டம் இன்றாம்;
இடுக்கண் பிறர்மாட்டு உவக்கும்;—அடுத்தடுத்து
வேகம் உடைத்தாம்: விறண்மலை நன்னாட!
ஏகுமாம் எள்ளுமாம்;—கீழ்

இந்தப் பாட்டுக்குப்பின் இரண்டு குறளும் நினைவுக்கு வந்தது.

''மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பார் யாங்கண்டதில்''

''சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

சூத்திரர்களே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? பிராமணோத்தமர்களே! தயவு கூர்ந்து. ஒன்று மட்டும் செய்யுங்கள் கொஞ்ச காலத்திற்கு. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இன்று துணை வேந்தராக இருப்பவர். பறையர் ஆதித்திராவிடர் சாந்தப்பா.

மிலேச்ச சாதிக்காரர் சாந்தப்பா கையெழுத்திட்ட பட்டங்களைப் பெற்றுக் கொள்வதில்லை என்ற முடிவெடுத்து உங்களுடைய குழந்தைகளை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் மட்டிலும் சாந்தப்பா இருக்கும் வரைக்கும் நிறுத்திவைக்க வேண்டுகிறேன்.

நம்மை பிராமணத் துவேஷி என்று கூறுபவர்களுக்கு 1953ல் குத்தூசியார் எழுதியதில் ஒரு பகுதியைப் படித்துப் பார்க்க வேண்டுகிறேன்:—

பார்ப்பனீய துவேஷத்திலிருந்து பார்ப்பண துவேஷத்திற்கு வருவதுதான் கருத்து வளர்ச்சி. இதற்கு மாறானது சந்தர்ப்பவாதம்; அல்லது கோழைத்தனம்; அல்லது இரண்டும் கலந்தது. பிறவி எதிரியின் மனத்தைத் திருப்பி நண்பனாக்கும் முயற்சி வெற்றிபெறாது.

நச்சுப்பையை வைத்திருக்கின்ற நல்ல பாம்பின் நச்சுப்பல் வைப்பிடுங்கி விட்டாவது படுக்கையில் வைத்து உறங்கவேண்டிய தேவை என்ன? படம் எடுத்து ஆடுகின்றது என்பதற்காவா? அல்லது அது ''நாதர் முடிமேலிருக்கும் நல்ல பாம்பு'' என்பதற்காகவா?

மனிதனுக்கு மனிதன் துவேஷம் பாராட்டக் கூடாது என்பது, பொதுநீதி தத்துவத்தைப் பொறுத்தவரையில் நியாயமாய் இருக்கலாம். ஆனால் பொதுநீதிகள் யாவுமே வாழ்க்கைக்கு ஒத்து வருகின்றனவா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். துவேஷ உணர்ச்சி தீமையைப் பயக்கும் சரிதான்; ஆனால் அந்தத் துவேஷத்தை உற்பத்தி செய்வதற்குக் காரணமாய் இருப்பது எதுவோ, அதை நீக்கினால் ஒழிய துவேஷ உணர்ச்சியை ஒரு குற்றம் என்று எப்படிக் கூற முடியும்?

ஆட்டைக் கொன்று தின்பதே புலியின் இயற்கை; ஆதலால் ஆடு புலியைத் துவேஷிக்கிறது. எலியைக் கொல்வது பூனையின் இயற்கைக் குணம். அதனால் எலிக்ள் பூனையைத் துவேஷிக்கின்றன தவளையை விழுங்குகிறது பாம்பு; ஆகையால் பாம்பைக் கண்டால் துவேஷிக்கிறது தவளை. யானையைக் கண்டால் சிங்கம் அதன்மீது பாய்கிறது; ஆதலால் அவ்வளவு பருமனுள்ள யானை கூட சிங்கத்தைத் துஷேிக்கிறது. விலங்கினங்களில் மட்டும் இந்த இயற்கை விதி இருப்பதாகக் கூறிவிட முடியாது.

எதற்கும் அஞ்சாதவன் என்றும் ஆறறிவு படைத்த உயர்ந்த பிறவி என்றும், கடவுளைக் கண்டவன் என்றும், விஞ்ஞானத்தின் உச்சிக் குடுமியை பிடித்து ஆட்டக் கூடியவன்

என்றும் பெருமையடித்துக் கொள்ளும் மனிதன்கூட துவேஷ உணர்ச்சியை மறந்திருக்க முடியவில்லை. தன்னைக் கொல்ல வரும் புலி. சிங்கம், கரடி, பாம்பு முதலியவைகளை மனிதன் துவேஷிக்கின்றான். தன் தூக்கத்தைக் கெடுக்கின்ற மூட்டைப் பூச்சி, கொசு முதலியவைகளைத் துவேஷிக்காமல் இருக்க முடிகிறதா?

தன் உணவுப் பொருள்களை மொய்த்துப் பாழ்படுத்தும் ஈ எறும்புகளை மனிதன் முத்தமா கொடுகிறான்? இது மட்டுமல்ல.

மனிதர்களுக்குள்ளாகவே கூட, இந்த துவேஷத்தைக் காண்கிறோம். இந்தியாவில் மட்டுமல்ல; உலகமெங்கும்! நாஜிசத்தைப் பரப்பும் ஜெர்மானியரை பிரிட்டிஷார் துவேஷிக்கின்றனர். ரஷ்யர் துவேஷிக்கின்றனர்; நாமும்கூட துவேஷிக்கின்றோம். இத்துவேஷம் அதன் தலைவர்களைத் தூக்கிலிடும் அளவுக்குச் சென்றதையும் கண்டோம்.

இதேபோல் ஜெர்மனியின் கல்வி செல்வம் கலாச்சாரம் இவ்வளவையும் சூறையாடி ஆதிக்கஞ்செலுத்திய யூதர்களை நாஜிகள் துவேஷித்தனர். நாட்டை விட்டே வெளியேற்றினர். அவர்கள் எங்கே போவது என்பதறியாமல் லம்பாடிக் கூட்டத் தைப் போல் திரிந்து கொண்டிருக்கின்றனர். பாலஸ்த் தீனத் தில் குடியிருக்கக் கூடாது என்கின்றனர் அரேபியர். 'இங்கு தேவையில்லை' என்கின்றனர் அமெரிக்கர். இங்கு மட்டும் என்ன கொட்டிக் கிடக்கிறதோ? என்கிறார்கள் பிரிட்டீஷார்.

ஐரோப்பாவிலுள்ள முதலாளிக் கூட்டம் ரஷ்யாவைத் துவேஷிக்கின்றனர். ரஷ்ய மக்கள் முதலாளிகளைத் துவேஷிக்கின்றனர். ரஷ்யாவில் மட்டுமல்ல, அமெரிக்காவில், சீனாவில், பிரிட்டனில்-ஏன் இந்தியாவில் கூடத்தான்!

"ஆட்சி முறையைத்தான் எதிர்க்கிறோம், தனிப்பட் டவர்கள்மீது எங்களுக்கு காழ்ப்பில்லை" என்று கூறிவந்த காங்கிரஸ்காரர்கூட 'வெள்ளையனே வெளியேறு' என்று

6713

R34 N53

கூறக்கூடிய அளவிற்கு வந்தனர். இன்னும் பல கூறலாம் இவைகளைப் போல.

எனவே மனிதன் தன்னை ஏமாற்றுகிறவனையோ, சுரண்டுகிறவனையோ, தன்மீது குதிரை ஏறுகிறவனையோ தனக்குத் தொல்லை விளைவிப்பவனையோ துவேஷிப்ப தென்பது, மனிதனின் இயற்கைக் குணத்தைச் சேர்ந்தது. ஆனால் இந்தத் துவேஷ உணர்ச்சியை நிறுத்தவே முடியாதா என்று கேட்கலாம். முடியும். எப்போது?

விஷப் பாம்பைத் துவேஷிப்பது போல, தண்ணீர்ப் பாம்பை துவேஷிப்பதில்லை, மனிதன். காரணம் விஷமில்லாத தால்; சர்க்கஸிலும் மிருகக் காட்சி சாலையிலும் அடை பட்டுக்கிடக்கும் புலியைக் கண்டு, தாராளமாக உலாவும் ஆடு அவ்வளவு அஞ்சுவதில்லை; கூட்டைவிட்டுப் புலி வெளி வர முடியாது என்பதை உணர்ந்திருப்பதனால்!

இவ்வாறே இந்தியாவுடன் தொடர்பே வைத்துக் கொள்ளாத ஓர் இங்கிலீஷ் கிராமவாசியை இந்தியர்கள் துவேஷிப்பதில்லை-சர்ச்சிலைத் துவேஷிப்பதுபோல!

சுரண்டுகிறவர்களும், நஞ்சை ஊட்டுபவர்களும், இரத் தத்தை உறிஞ்சுபவர்களும் சதையைப் பிய்த்துத் தின்பவர் களும் தங்கள் குணத்தை மாற்றிக்கொண்டால் துவேஷ உணர்ச்சி குறையலாம்.

எந்தக் கட்சிப் பற்றுமேயில்லாத தமிழர்களுள் கூடத் தான் துவேஷிக்கின்றனர். ஆனால் எடுத்துச் சொல்லு வதற்குப் பயம் சிலருக்கு! எடுத்துச் சொல்லித் தெரியாது பலருக்கு; இதைச் சாவகாசமாக ஆலோசித்துப்பார்க்குமாறு கூறுகிறோம். நம்மை 'பார்ப்பனர் துவேஷி' என்கிறார்கள். சொல்லட்டுமே! நாம் வெட்கப்படவில்லை "ஆம்" என் போம்! பயமென்ன?

66927

அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை—14.